ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

ஆண்டாள் அருளிச்செய்த

# ॥ தெள்ளியார் பலர் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தெள்ளியார் பலர் ॥

## கூடல் இழைத்தல்

‡தெள்ளியார்⋆ பலர் கை தொழும் தேவனார்⋆
வள்ளல்⋆ மாலிருஞ்சோலை மணாளனார்⋆
பள்ளி கொள்ளும் இடத்து⋆ அடி கொட்டிடக்⋆
கொள்ளு மாகில்⋆ நீ கூடிடு கூடலே! (1)

‡காட்டில் வேங்கடம்⋆ கண்ண புர நகர்⋆
வாட்டம் இன்றி⋆ மகிழ்ந்துறை வாமனன்⋆
ஓட்டரா வந்து⋆ என் கைப் பற்றி⋆ தன்னொடும்
கூட்டு மாகில்⋆ நீ கூடிடு கூடலே! (2)

பூ மகன் புகழ் வானவர்⋆ போற்றுதற்-
கா மகன்⋆ அணி வாணுதல்⋆ தேவகி
மாமகன்⋆ மிகு சீர்⋆ வசுதேவர் தம்⋆
கோமகன் வரில்⋆ கூடிடு கூடலே! (3)

ஆய்ச்சி மார்களும்⋆ ஆயரும் அஞ்சிட⋆
பூத்த நீள்⋆ கடம்பேறிப் புகப் பாய்ந்து⋆
வாய்த்த காளியன் மேல்⋆ நடம் ஆடிய⋆
கூத்தனார் வரில்⋆ கூடிடு கூடலே! (4)

மாட மாளிகை சூழ்⋆ மதுரைப் பதி
நாடி⋆ நந் தெருவின்⋆ நடுவே வந்திட்டு⋆
ஓடை மா மத யானை⋆ உதைத்தவன்⋆
கூடுமாகில்⋆ நீ கூடிடு கூடலே! (5)

அற்றவன்⋆ மருதம் முறிய நடை
கற்றவன்⋆ கஞ்சனை⋆ வஞ்சனையில்
செற்றவன்⋆ திகழும்⋆ மதுரைப் பதி⋆
கொற்றவன் வரில்⋆ கூடிடு கூடலே! (6)

www.prapatti.com

அன்றின்னாதன செய்⋆ சிசுபாலனும்⋆
நின்ற நீள் மருதும்⋆ எருதும் புள்ளும்⋆
வென்றி வேல் விறல்⋆ கஞ்சனும் வீழ⋆ முன்
கொன்றவன் வரில்⋆ கூடிடு கூடலே! (7)

ஆவல் அன்புடையார் தம்⋆ மனத்தன்றி
மேவலன்⋆ விரை சூழ்⋆ துவரா பதிக்
காவலன்⋆ கன்று மேய்த்து⋆ விளையாடும்⋆
கோவலன் வரில்⋆ கூடிடு கூடலே! (8)

கொண்ட கோலக்⋆ குறள் உருவாய்ச் சென்று⋆
பண்டு மாவலி தன்⋆ பெரு வேள்வியில்⋆
அண்டமும் நிலனும்⋆ அடி ஒன்றினால்⋆
கொண்டவன் வரில்⋆ கூடிடு கூடலே! (9)

பழகு நான் மறையின்⋆ பொருளாய்⋆ மதம்
ஒழுகு வாரணம்⋆ உய்ய அளித்த⋆ எம்
அழகனார்⋆ அணி ஆய்ச்சியர் சிந்தையுள்⋆
குழகனார் வரில்⋆ கூடிடு கூடலே! (10)

‡ஊடல் கூடல்⋆ உணர்தல் புணர்தலை⋆
நீடு நின்ற⋆ நிறை புகழ் ஆய்ச்சியர்⋆
கூடலைக்⋆ குழற் கோதை முன் கூறிய⋆
பாடல் பத்தும் வல்லார்க்கு⋆ இல்லை பாவமே (11)

॥ ஆண்டாள் திருவடிகளே சரணம் ॥



www.prapatti.com